# சரணாகதி

**முனைவர் ஆ.கோமதி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் தேடுதல் என்பது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஒருசிலர் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி, புறவுலக வாழ்க்கையில் தன்னை உயர்த்திக்கொள்ள விரும்புகின்றனர். பக்திநெறியில் செல்வோர் அறிவுக்கு அப்பால் உள்ள உண்மை நிலையை அறிய முற்படுகின்றனர். அத்தகைய பக்திநெறியின் உயர்ந்த நிலையாகக் கொள்ளப்படும் சரணாகதி வைணவத்திற்கு மட்டுமே உரிய ஒன்று என்ற எண்ணம் பெரும்பான்மையினரிடம் உண்டு. ஆனால் சைவ அடியவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் வாழ்வில் சரணாகதியினை மேற்கொண்டு இறைவனை அடைந்ததை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சரணாகதி**

இறைநிலை எனப்படும் முக்திநிலையை அடைய மேற்கொள்ளப்படும் வழிமுறைகளில் ஒன்று பக்திநெறி. இத்தகைய பக்திநெறியில் இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கும் போக்கானது சரணாகதியில் காணப்படுகிறது. 'நான்' என்ற ஒன்று இல்லாமல், தன்னை முழுமையாக இறைவனிடம் இழந்து நிற்கும் நிலையைச் சரணாகதி என்பர். "நமது முயற்சிகள் அனைத்தையும் கைவிட்டு இறைவனைச் சரணடைதல் ஒன்றே வழி. இறைவனே அனைத்தையும் செயல்படுத்தட்டும். அவன் நம்மை எங்கே கூட்டிச்சென்றாலும் சரி, உன்செயலே அனைத்தும் என்று அவனைச் சரணடைதல் மட்டுமே வழி. (ஸ்ரீ பகவத், அனுஷ்டான ஆன்மீகம், பக்.147-148)

சரணாகதி என்றால் என்ன என்பது குறித்துப் பலநூல்களிலும் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. "பக்தியின் உயர்ந்த நிலையாகக் கூறப்படுவது தான் சரணாகதியாகும். சுரணாகதி செயல்படுவதால் மட்டுமேஇ ஒருவரால் இந்தப் பக்தி மார்க்கத்தின் மூலம் ஞானத்தெளிவை அடைந்திட முடியும்". (ஸ்ரீ பகவத், தியானத்தை விடு ஞானத்தை பெறு, பக்.72)

**"தனக்குவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது" (திருக்குறள், கடவுள் வாழ்த்து, பா.7)**

என்ற திருக்குறளும் சரணாகதி என்பதை விளக்குவதாகவே அமைகின்றது.

"என்னைத் தவிர வேறு எதனையும் எண்ணாமல், என்னிலே உறைந்து, என்னையே சார்ந்து வாழ்கிறவனுக்குத் தேவைப்படுகிற அனைத்தையும் நான் அளித்து விடுகிறேன்." (பகவத் கீதை, ப.9) தன்னை விட மேலானவனான இறைவனிடம் தன்னை ஒப்படைக்கும் நிலையில் சரணாகதி நிலையைப் பெறுகின்றனர் பக்தர். அனுபவத்தோடு தொடர்புடையதாக அமைகின்றது சரணாகதி. சரணாகதியில் இறை அனுபவ லயிப்பும், உலக இன்பதுன்ப விடுதலையும் ஏற்படுகிறது. இறைவனிடம் தன்னை முழுமையாக

ஒப்படைப்பதன் மூலம் "நான்" என்ற ஒன்று இல்லாது போகின்றது. புலன்களால் அறியப்படாதவன் இறைவன். சொற்பதங்கடந்து நிற்பவன். தூய அன்பினால் அறியப்படுபவன். அத்தகைய இறைவனை அடைய சரணாகதி துணை நிற்கின்றது.

**சரணாகதியும் வைணவமும்**

சரணாகதி தத்துவத்தினை ஆழ்வார்கள் பெரிதும் போற்றினர். சரணாகதித் தத்துவம் என்பதை வைணவர்கள் "பிரபத்தி" என்று அழைப்பர். பக்தியில் சிறந்த நிலை சரணாகதி. 'எல்லாம் அவன் செயல்' என்று முழுக்க முழுக்கத் தன்னை அவனிடத்தில் ஒப்படைப்பதே சரணாகதி தத்துவம்.

**"பற்றே லொன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்**
**மற்றே லொன்றறியேன் மாயனே!எங்கள் மாதவனே**
**கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா**
**அற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே" (பெரிய திருமொழி.1036)**

என்று கூறி முற்றிலும் திருமாலைச் சரணடைந்து தமக்கு அருள்புரியுமாறு வேண்டுகிறார் திருமங்கையாழ்வார்.

**"ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்**
**ஆனைக்குநீயருள் செய்தமையால்" (பெரியாழ்வார் திருமொழி.423)**

யானைக்கு அருள்புரிந்த திருமால் தம்மையும் அருள் செய்து காக்க வேண்டும் என்று பெரியாழ்வார் பாடுகின்றார். சுரணாகதி நிலையில் நின்று உணர்வுப் பூர்வமான அணுகுமுறையைக் கொண்டு இறைவன் பெருமை பேசியவர்களுள் ஆண்டாளும் ஒருவர் ஆவார்.

குலசேகராழ்வாரும் சரணாகதி நெறியைத் தன்னுடைய பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார்.

**"தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால்**
**சரணில்லை" (பெருமாள் திருமொழி.688)**

என்ற பாசுரத்தின் மூலம் தன்னுடைய சரணாகதி நிலையை எடுத்துரைக்கின்றார். சுரணாகதி என்புத வைணவத்திற்கு மட்டுமே உரிய நெறிமுறை என்ற எண்ணம் பெரும்பான்மையானவர்களிடம் உள்ளது. ஆனால் சரணாகதி என்பது வைணவத்திற்கு மட்டுமோ அல்லது சைவத்திற்கு மட்டுமோ உரிய ஒன்று கிடையாது. நான் என்பதை இழந்து இறைவனிடம் தன்னை முழுமையாய் ஒப்படைக்கும் அனைவருக்கும் உரிய ஒரு கொள்கையே சரணாகதி. உலகில் உள்ள அனைத்து மதங்களின் கொள்கையும் ஒன்றே. அனைத்து மதங்களும் மனிதனை மேன்மையடையச் செய்யவதையே நோக்கமாகக் கொண்டவை. மனித மனத்தைப் பக்குவப்படுத்துவதே சரணாகதி. மனிதன் கொண்டுள்ள பற்றுதல்களிலிருந்து விடுபட சரணாகதி அவனுக்குத் துணை புரிகின்றது. மனப்பக்குவத்தை வேண்டி நிற்கும் அனைவருக்கும் உரிய ஒன்றே சரணாகதி. இத்தகைய சரணாகதி என்பது ஒரு மதத்திற்கோ அல்லது ஒரு தனிமனிதனுக்கோ மட்டும் உரிய ஒன்றாகக் கருத முடியாது. அனைத்து மதத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு தத்துவமே சரணாகதி ஆகும்.

**மாணிக்கவாசகர்**

மாணிக்கவாசகரை, 'மணிவாசகர்', 'திருவாதவூரடிகள்', 'பெருந்துறைப் பிள்ளை' என்று கூறுவர். இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தவர். இளமையிலே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது ஈடுபாடு கொண்டு விளங்கினார். இவரின் கல்வி, ஆற்றல் இவற்றை உணர்த்த பாண்டிய மன்னன் அரிமர்த்தனபாண்டியன் மாணிக்கவாசகரைத் தனது அமைச்சராக்கிக் கொண்டார். அமைச்சராய் பணி செய்த மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனுக்காகக் குதிரைகள் வாங்கச்செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவன் குருவாக வந்து தன்னை ஆண்டு கொண்டதைத் திருவாசகத்தின் பல இடங்களில் கூறியுள்ளார். அதுவே,

**"தானே வந்தெம்மைத் தலைஅளித்தாட் கொண்டருளும்" (திருவாசகம். திருவெம்பாவை, பா.6)**

குரு தரிசனத்தினால் மாணிக்கவாசகர் இறையனுபவ லயிப்பில் மூழ்கினார். இத்தகைய நிலையை ஆன்மீகச் சாதகர்கள் மனோலயம் என்பர்.

"இறைசிந்தனையிலோ, இறையுணர்விலோ நமது மனம் லயமாகி அமைதியுடன் இருப்பதை மனோலயம் என்று குறிப்பிடுகின்றனர்." (ஸ்ரீ பகவத், அனு'டான ஆன்மீகம், பக்.156) இறையுணர்வினால் மாணிக்கவாசகர் தமது அமைச்சர் பதவியை மறந்து, இறைநினைப்பாக இருந்தார் என்று அவரது வரலாறு வழி அறியமுடிகிறது.

திருப்பெருந்துறையில் குருதரிசனம் கிடைத்தது இறையனுபவத்தில் மூழ்கிய மணிவாசகர் பல நாள் அடியார் கூட்டத்துடன் திருப்பெருந்துறையில் இருந்தார். தமது அமைச்சர் பதவியை மறந்து இறைநினைப்பில் திளைத்து இருந்தார். நடந்தவற்றை அறிந்த பாண்டியமன்னன், 'உடனே குதிரைகளுடன் வந்து சேர வேண்டும்' என்று ஆணையிட்டார். மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் மாணிக்கவாசகர் பொருட்டு நரியைப் பரியாக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது போன்ற திருவிளையாடல்களை நிகழ்த்தினார். மதுரையில் அமைச்சர் பதவியைத் துறந்து, மீண்டும் திருப்பெருந்துறை வந்தார் மாணிக்கவாசகர்.

இந்நிலையில், இறையனுபவம் இடையீடுபட்டதால் இறையனுபவ பரவசம் நீங்கியது. இறையனுபவ பரவசம் நீங்கியதால் அந்த இன்பநிலையிலிருந்து வெளிவந்தார் மாணிக்கவாசகர் அந்நிலையில் உலக இன்ப துன்ப அனுபவங்கள் மேலோங்கியது. அந்நிலையில் மனவருத்தம் அடைந்த மாணிக்கவாசகர் இறைவனிடம் மீண்டும் இறையனுபவ பரவசம் வேண்டும் என்று முறையிட்டு ஏங்கிப் பாடினார். இன்பநாட்டத்தின் காரணமாக அமைந்த இறையனுபவ ஏக்கமானது அவரை இப்படி பாடி இறைவனிடம் முறையிடத் தூண்டியது.

### மாணிக்கவாசகரின் சரணாகதி

மாணிக்கவாசகர் குருதரிசனம் பெற்ற நிலையில் இறையனுபவ லயிப்பில் ஈடுபட்டார். பின்னர் அந்த லயிப்பு நீங்கிய நிலையில் அந்த நிலைக்கு ஏங்கினார். ஏங்கி இறைவனிடம் முறையிட்டு அந்த நிலையினைப் பெற்றிட முனைந்தார். ஆனால் இறைவன் திருவடியை அடைந்தால் மட்டுமே அந்த நிலை நிலைத்து நிற்கும் என்பதனை உணர்ந்த மாணிக்கவாசகரின் சரணாகதியானது இறைவன்மீது அவர் கொண்ட நம்பிக்கையை எடுத்துரைப்பதாக அமைகின்றது. மேலும், இறைவனே அனைத்தும் என்று தன்னுடைய போராட்டங்களை கைவிட்டநிலை காணப்படுகின்றது. இறைவனிடம் சரண்அடைவதன் மூலம் அவனே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வான் என்றும் தனக்கு இனி எந்த பொறுப்பும் இல்லை என்ற தன்மையும் ஏற்படுகின்றது. அகம், புறம் என்ற இரண்டு இடங்களிலும் இந்த சரணாகதி அமைகின்றது. ஞானப்புரிதல் என்பது அகம் சார்ந்த ஒன்றாகும். ஆனால் சரணாகதியில் அகம், புறம் என்ற இரண்டு இடங்களிலும் இறைவனே அனைத்திற்கும் காரணம், அவனே பொறுப்பு என்று பொறுப்புகளை இறைவனிடம் ஒப்படைக்கும் தன்மையில் அமைகின்றது. சரணாகதி நிலையிலும் இறைலயிப்பு என்பது ஏற்படுகின்றது. இது இறைவனே அனைத்தும் என்று மனம் அவனையே நினைப்பதால் ஏற்படுவது ஆகும். சரணாகதி நிலையில் இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கும் நிலையில் நான் என்பது இல்லாமல் போகின்றது. இத்தகைய சரணாகதி நிலையை மேற்கொண்டு மாணிக்கவாசகர் முக்திநிலையை அடைகின்றார்.

### முடிவுரை

சரணாகதி தத்துவத்தினை முழுமையாக நோக்கின் அதன் தன்மை விளங்கும். மனித மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஒரு தத்துவநெறியே சரணாகதி. அந்த தத்துவம் ஒரு மதத்தினைப் பின்பற்றுபவர்களுக்கோ, ஒரு தனிப்பட்ட கடவுளை வழிபடுபவர்களுக்கோ மட்டும் உரிய ஒன்று இல்லை. சரணாகதி தத்துவம் இறைவனை அடைய நினைக்கும் அனைவருக்கும் உரிய ஒன்றாகும். மாணிக்கவாசகர் சரணாகதி அடைந்த நிலையையும் இறைவனை அடைந்த நிலையையும் திருவாசகத்தின் மூலம் அறியமுடிகின்றது.

### மேற்கோள் நூல்கள்

1. மாணிக்கவாசகர் திருவாசகம் (எட்டாம் திருமுறை), மூலமும் பல ஆராய்ச்சி அகராதிகளும், சைவ சித்தாந்த பெருமன்றம், சென்னை.
2. ஸ்ரீ பகவத் தியானத்தை விடு, ஞானத்தைப் பெறு, ப்ரவாகம் பப்ளிகேசன், சேலம்.
3. ஸ்ரீ பகவத் அனுஷ்டான ஆன்மீகம், ப்ரவாகம் பப்ளிகேசன், சேலம்.
4. நாலாயிரதிவ்வியபிரபந்தம் புலவர் த.திருவேங்கட இராமானுஜதாசன், உமா பதிப்பகம்.
5. திருக்குறள் திருவள்ளுவர், கொற்றவை பதிப்பகம்.